நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No.83/2022**

**P.W. 3 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பூபதி |
| தந்தை / கணவர் பெயர் | : | கிருஷ்ணமூர்த்தி |
| கிராமம் | : | கூராண்டிபுதூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 3** |
| வயது | : | 40 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம், 12–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.28PM.)

1. நான் சம்பவத்தின்போது வழக்கறிஞர் பிரபாகரன் தோட்டத்தில் வேலை செய்து வந்தேன். டமார் என்று சத்தம் கேட்டு நான் சம்பவ இடத்திற்கு சென்று சம்பவத்தை பார்த்தேன். சத்தம் கேட்டு 5 நிமிடத்தில் நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. சம்பவ

இடத்திற்கும் நான் வேலை செய்த இடத்திற்கும் சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும்.

2. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. பிரேத விசாரணையின் போது நான் சாட்சியாக இருந்தேன்.நான் வழக்கறிஞர் பிரபாகர் அவருடைய அலுவலகத்தையும் , தோட்டத்தையும் உதவியாளராக இருந்து பார்த்துகொண்டு இருப்பதால் இறந்தவர் அவரது உறவினர் என்பதாலும் எனக்கும் பாட்டி என்பதாலும், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.35PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**